Darma
தா்மா
Newsletter of Darma Muneeswaran Temple
VOLUME 35 April 2017
MCI(P)102/12/2012

# The Temple Management Committee wishes' all devotees a prosperous Happy Heyvilambhi Tamil New Year!

# பக்தர்கள் அனைவருக்கும் ஆலய மேலாண்மைக் குழுவினரின் ஹேவிளம்பி தமிழப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



## Commissioning of Gold Kavasam for Vinayagar

The gold cladding ceremony for Lord Vinayagar was done on 14th January 2017 .Special poojas was performed for Lord Vinayagar on the day . It was a long yearned wish of Lord Vinayagar devotees to see him adorned in gold cladding , it was a dream come true for the devotees to see Lord Vinayyagar looking resplendent and majestic in his gold claddings. The Temple Management Committee would like to thank all donors and sponsors for their generous contributions and for making the gold cladding of Lord Vinayagar a success . May Lord Vinayagar shower his blessings on all .

## ஸ்ரீ விநாயகருக்கு தங்கக் கவசம் அணிவித்தல்

முதல் கடவுளான விநாயகனக்கு, தங்கச் சமயச் சடங்கு இவ்வாண்டு ஜனவரி 14ம் தேதியோடு, மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. அன்றைய தினமே, விநாயகருக்கு பல்வேறு சிறப்பான பூஜைகள், அன்றே நடைபெற்றன. மாட்சிமை தங்கிய முறையில், விநாயகரை நேரில் காண்பதற்கு மிகவும் நேர்த்தியாக இருந்தது. பக்தர்கள் பலருக்கு அதைக் கண்டு மகிழ அது அழகாகவும், அதிசயமாகவும், கம்பீரமாகவும் அமைந்திருக்கும். கோவில் நிர்வாகக் குழு, எல்லா நன்கொடையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அதன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. எல்லார் மீதும் பிரகாசமான அருளை வழங்க விநாயகர் பெருமான் கருனை வழங்குவாராக!














# ஸ்ரீ ஸர்வமங்கள நவசண்டி யாகம்

நமது ஆலயத்தில் அருள் ஆட்சி செய்து வரும் ஸ்ரீ மஹா மாரியம்மனுக்கு 22ம் ஆண்டு ஸ்ரீ ஸர்வமங்கள நவசண்டி யாகம் சிறப்பாக நடைபெற்றது.

## சண்டியாகத்தின சிறப்பு

கலியுகத்தில விநாயகரும், சண்டிகாதேவியும் சிறப்பாக பூஜைகள் செய்யப்படுகிறது. இவ்விருவரும் பக்தர்களுக்கு வேண்டிய 16 செல்வங்களையும் உடனே அளிப்பவர்கள். வடமொழியில் “கலௌ சண்டி விநாயகௌ” என்கிற சொல்லுக்கிணங்க சண்டியாகம் கலியுகத்தில் தலைசிறந்த யாகமாகும். வீரம், செல்வம் கல்வி, ஆகியவைக்கு அதி தேவதையாக விளங்கக் கூடிய ஸ்ரீ துர்க்காதேவி, ஸ்ரீ லஷ்மி தேவி, ஸ்ரீ சரஸ்வதி தேவி ஆகிய முப்பெரும் தேவிகளும் ஒருங்கிணைந்த அம்சமே ஸ்ரீ சண்டி தேவியாகும். சண்டன், முண்டன் மஹிஷாசுரன், என்கிற அசுர்களை வதம் செய்ததால், சண்டிதேவி என்று அவள்அழைக்கப்படுகிறாள்.





# கர்மா மற்றும் மறுபிறவி பற்றிய இரகசியங்கள்

கர்மா என்றால் செயல் என்று பொருள். நன்மை, தீமை, நாம் செய்யும் செயல்களே கர்மா எனப்படுவது ஆகும். நமது வாழ்க்கை, நமது பிறப்பில் செய்யும் செயல்களின் கணக்கு, அதாவது கர்மாவின் கணக்கு. இந்த கணக்கு சரியாகும் வரை உங்களது பிறவி தொடரும். நம்மை அறிந்தும், அறியாமலும் நாம் நிறைய செயல்கள் செய்கிறோம். இதில் நமக்கே தெரியாமல் நன்மை விளையவும் வாய்ப்புகள் உண்டு, தீமைகள் விளையவும் வாய்ப்புகள் உண்டு. ஒருவரது கர்மா தான் அவரது கடந்த பிறவியில் இருந்து நிகழ் பிறவிக்கும், நிகழ் பிறவியில் இருந்து அடுத்த பிறவிக்கு கூட்டிச் செல்கிறது. நமது கர்மா தான் நமது பிறப்பிடம், சூழல், குடும்பத்தை முடிவெடுக்கிறது என்று கூறப்படுகிறது. நமது வாழ்க்கை முழுவதிலும் ஏற்படும் இன்பம், துன்பம், வலி அனைத்தையும் கர்மா தான் தீர்மானம் செய்கிறது. எதிர்பார்ப்புகள் அற்ற உதவி. கர்மாவை பற்றி நாம் அறிந்துக் கொள்ள வேண்டியதில் முக்கியமானது தர்மம் கடமை. யார் ஒருவர் எந்த ஒரு எதிர்பார்ப்பும், பின் விளைவின் எதிர் நோக்கமின்றி தங்களது கடமை தர்மம் செய்கிறார்களோ அதேவே உத்தமம் என்று கூறப்படுகிறது. கர்மா வகைகள் :- கர்மாவை மூன்று வகைகளாக பிரிக்கிறார்கள் அவை, சஞ்சித கர்மா, ஆகாம்ய கர்மா மற்றம் பிராரப்த கர்மா.

**சஞ்சித கர்மா:-** சஞ்சித கர்மா என்பது, முற்பிறவியில் நாம் செய்த பலன்களை பொருத்து, நமக்கு வாய்க்கப்பட்ட இந்த பிறவியாகும். சஞ்சித கர்மாவின் பலன் தான் நமது இந்த பிறவி மற்றும் அடுத்த பிறவியிலும் தாக்கமாக இருக்கும்.



**ஆகாம்ய கர்மா:-** இந்த பிறவியில் செய்யும் பாவ, புண்ணியத்தின் கணக்கு தான் ஆகாம்ய கர்மா ஆகும். இது, உங்களது அடுத்த பிறவிகளில் தாக்கம் செய்யும்.

**பிராரப்த கர்மா:-** ஏற்கனவே கணிக்கப்பட்ட கர்மாவின் செயல்பாடு தான் பிராரப்த கர்மா. உங்கள் தற்போதைய பிறவியில் நடந்துக் கொண்டிருக்கும் செயல்கள் மற்றும் விதி அனைத்தும் பிராரப்த கர்மாவின் தாக்கமாக தான் இருக்கம்.

**பாவப்பாதை ஒமிப்பது:-** நீங்கள் பாவத்தை ஒழிப்பதால், தீமையை கைவிடுவதால் உங்களது ஆகாம்ய கர்மா இரட்சிக்கப்படும். பாவ, புண்ணியத்தின் கணக்கின் படி தான் சஞ்சித கர்மா உங்களை பின் தொடர்ந்து வருகிறது. பாவங்களை நீங்கள் முற்றிலுமாக நீக்கும் போது, உங்களது சஞ்சித கர்மாவானது முடிவு பெரும்.

**கர்ம யோகா:-** எப்படியானாலும் உங்களது தற்போதைய பிறவியில் பிராரப்த கர்மாவின் தாக்கம் இருக்க தான் செய்யும். ஏனெனில் இது நீங்கள் சென்ற பிறவியில் செய்த செயல்களின் தாக்கம். அகங்காரம் தவிர்த்து நீங்கள் உங்கள் கடமையை செய்யுங்கள், சமன்திறன் மனநிலையில் பயணம் செய்யுங்கள். யார், எவரென்று பாராமல் நீங்கள் உங்கள் கடமையை சரியாக செய்தல் முக்கியம்.

**ஆசை துறக்க வேண்டும்:-** கர்மா என்பது அசையுடன் பிரயாணம் செய்யும் ஒன்றாகும். இந்த ஆசைதான் உங்கள் கர்மாவை ஆட்டிப்படைக்கிறது. ஆசையை துறந்து நன்மை காரியங்களில் ஈடுபடும் போது அதில் பாவம் ஏற்பட வாய்ப்புகள் இல்லை.

**மகிழ்ச்சி அகங்காரம்:-** இன்றி நீங்கள் பூரணமாய் ஓர் செயலில் ஈடுபடும் போது உங்களுக்கு புண்ணியம் சேர்கிறது. இதுவே உங்களுக்கு நித்திய அனந்தத்தையும், செம்மையான மகிழ்ச்சியையம் அளிக்கிறது. மற்றும் இதுவே, உங்களது வாழ்க்கை சக்கரமான பிறப்பு, இறப்பிற்கு முற்று புள்ளியாய் அமைகிறது.

## பச்சை தேங்காயின் பயன்கள்



தேங்காயை பச்சையாக ஒரு வேலை உணவாக எடுப்பதினால் ஏற்படும் நன்மை.....
பொதுவாக தேங்காயில் அதிகமாக கொழுப்பு உள்ளது என்பது உண்மைதான், ஆனால் எப்பொழுது கொழுப்பு உருவாகும் என்றால் அதை சமைக்கும் போதுதான் தேங்காய் கொழுப்பாக மாறும். தேங்காயை உடைத்த அரைமணி நேரத்திற்க்குள் பச்சையாக சாப்பிட்டுவிட்டால், அதுதான் அமிர்தம். சகலவிதமான நோய்களையும் குணமாக்கும். உடம்பில் உள்ள கெட்ட கொழுப்பு மற்றும் அழுக்குகளை அகற்றும். இரத்தத்தை சுத்தமாக்கும், உடலை உரமாக்கும், உச்சி முதல் பாதம் வரை உள்ள உருப்புக்களை புதுப்பிக்கும். தேங்காய்க்கும் நமக்கும் உள்ள ஒற்றுமை, நாம் அன்னை வயிற்றில் இருந்து பூமிக்கு வர 10 மாதம் அதுபோல தேங்காய் கருவாகி பூமிக்கு வர 10 மாதம் ஆகும். இனி முடிந்த அளவு தேங்காயை பச்சையாக உண்போம். காலையில் தேங்காயை துருவி அதனை அரைத்து பாலெடுத்து அதனுடன் நாட்டு சர்க்கரை கருப்பட்டி தேன் சேர்த்து பாக்கட் பாலைத்தவிர்த்து விட்டு அதற்கு பதிலாக தந்து பாருங்கள். தாய்ப்பாலில் இருககும் மோனோலாரின் சக்தி தேங்காயை தவிர வேறு எதிலும் இல்லை...

# BURSARY AWARDS CEREMONY

Darma Muneeswaran Temple organised its 15th Bursary Award and the 2nd Munneru! Awards ceremony on 26 February 2017. Ms Chan Hui Yuh, GRO to Serangoon CCC graced the event and gave away the bursary awards and Munneru! Awards to 50 students from both the primary and secondary schools. Parents, mentors, DMT life members and Committee members attended the event. Mr M.Vengadasalam, President of DMT gave the welcome speech and Prof Appan, our ex-trustee gave a motivational talk to the students on the value of education. Two Munneru! Award recipients, Usha Nandini and Yogeshwaran spoke on how the Munneru! Programmes had inspired them in their studies and thanked the Temple for providing such an opportunity to them.

As part of the Munneru! Programme, the Temple will continue to monitor and assist bursary recipients in their educational endeavour. The idea of the Munneru! Award is to facilitate student improving their educational attainment and progressing in their studies. To this extent the Temple has set aside a budget of $35,000 for the programme. It is the desire of the Temple to assist our devotees' children to do better in their studies and become valuable citizens of this country.



## ஹேவிளம்பி வருடம் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்



ஸ்ருஷ்டி, ஸ்த்தி, ஸம்ஹாரம், என்கிற மூன்று தொழில்களையும் செய்து வரும், திருமூர்த்திகளின் ஆக்ஞையை, அனுசரித்து ஆதித்ய முதலான நவக்ரஹங்கள் ப்ரதி வருஷமும் ஒவ்வொரு பொறுப்பையும் மேற்கொண்ட நவநாயகர்களாக இருந்து இந்த உலகத்தை நடத்தி செல்கின்றனர். நவநாயகர்களின் செயலுக்கு அன்றாடம் ஏற்படுகின்ற திதி, வார, நக்ஷத்ர, யோக, கரணங்கள், தான் ஆதாரமாக உள்ளன. இந்த ஐந்து அங்கங்களையும் 365 நாட்களுக்கும் கனித்து கூறும் நூலுக்குதான் பஞ்சாங்கம் என்று பெயர், ஒவ்வொரு வருஷமும் எந்தந்த கீரஹும் என்னென்ன பொருப்பேற்று நடத்துக்கின்றது அதன் பலன்கள் என்ன என்கிற விவரங்களும் மற்றும் அது, சம்பந்தபட்ட சுபாசுபங்களுக்கு தேவையானவைகளையும் இந்த பஞ்சாங்கம் என்கிற நூலில் கூறப்படுகிறது. புது வருஷ ஆரம்பதினத்தில் பஞ்சாங்க படனம் (பஞ்சாங்கம் படித்தல்) என்கின்ற நிகழ்சியை ஆலயத்தில் சென்று இந்த வருஷ பலன்களை கேட்பவர்களுக்கு நற்குணங்களும் கிடைக்கின்றன. விரோதிகளை வலுவிழுக்க செய்கிறது. கெட்ட கனவுகளால் ஏற்படும் தோஷங்கள் எல்லாம் நீங்கிவிடுகிறது. மேலும் கோதானத்தினால் உண்டாகும் பலன்களுக்கு சமமான நல்ல பலன்களும் நீண்ட ஆயுளும் எல்லாவித சௌக்யங்களும், செல்வங்களும், உண்டாகின்றன என்கிற பலன்கள் ஆலயத்தில் வாசிக்கப்படும். அனைவரும் ஆலயத்திற்கு வருகைபுரிந்து ஸ்ரீ தரும முனீஸ்வரர் திருவருளை பெற வேண்டுகிறோம். அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.



## BAKTHI

When Bhakti enters Food,
Food becomes Prasad
When Bhakti enters Hunger,
Hunger becomes a Fast
When Bhakti enters Water,
Water becomes Charanamrit
When Bhakti enters Travel,
Travel becomes a Pilgrimage
When Bhakti enters Music,
Music becomes Kirtan
When Bhakti enters a House,
House becomes a Temple
When Bhakti enters Actions,
Actions become Services
When Bhakti enters in Work,
Work becomes Karma
When Bhakti enters a Man,
Man becomes Human
When Bhakti enters WhatsApp
Chat becomes Satsang.



# NAIVEDYAM

## WILL GOD EAT OUR OFFERINGS?

A Guru-Shishya conversation:

The sishya who doesn't believe in God, asked his Guru thus:
"Does God accept our 'neivedhyam'(offerings)? If God eats away the 'prasadham' then from where can we distribute it to others? Does God really consume the 'prasadham', Guruji?"

The Guru did not say anything. Instead, asked the student to prepare for classes. That day, the Guru was teaching his class about the 'upanishads'. He taught them the 'mantra': "poornamadham, poornamidham, ......poornasya poornaadaaya...." and explained that: 'every thing came out from "Poorna or Totality." (of ishavasya upanishad).

Later, everyone was instructed to practice the mantra by-heart. So all the boys started practicng. After a while, the Guru came back and asked that very student who had raised his doubt about Neivedyam to recite the mantra without seeing the book, which he did.Now the Guru gave a smile and asked this particular shishya who didn't believe in God: 'Did you really memorize everything as it is in the book? The shishya said: "yes Guruji, I've recited whatever is written as in the book.

The Guru asked: "If you have taken every word into your mind then how come the words are still there in the book? He then explained:

"The words in your mind are in the SOOKSHMA STHITI (unseen form). The words in the book are there in the STOOLASTHITI (seen).
God too is in the 'sooksma sthiti'. The offering made to Him is done in 'stoola sthiti'. Thus, God takes the food in 'sookshmam', in sookshma stithi. Hence the food doesn't become any less in quantity.
While GOD takes it in the "sookshma sthiti", we take it as 'prasadam' in 'sthoola sthiti'.

Hearing this the sishya felt guilty for his disbelief in God and surrendered himself to his GURU.

## 2002 மலர்ந்த இளயோகம்

2002ஆம் ஆண்டின் தொடக்க காலம். அப்போதுதான் யோகாப்பியாசிக் காலம் தொடங்கிற்று. ஆதரவுக் காலம் ஆதரமாக இருந்தது. அதுவும் சிராங்கூன் வட்டாரத்தில் சிறப்பாகவே விளங்கிற்று. அது ஆரம்ப காலமாக இருந்ததனால், அதிகமான குழந்தைகள் மிகுந்த உற்சகத்தினால் யோகாசனத்தில் கலந்துகொள்ள முனைந்தனர். காலம் போகப் போகப், அந்த யோகாசனத்தில் கூடுமானவர்கள் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள். யோகாசனம், நாளொரு மேனியும் பொழதுதொரு வண்ணமுமாக மலர ஆரம்பித்தது. ஆலயங்களிளும் அரங்குகளிளும் ஊற்றெடுக்க ஆரம்பித்த யோகாசனம், அதையும் தாண்டி உய்ய ஆரம்பித்தது. ஒவ்வொருவரும், அடுத்தவரை போட்டி போட்டு, மிகவும் உயரிய நிலைக்கு மேலெழும்ப முனைந்தனர். காலப்போக்கில், யோகப் போட்டி நிலை, மிகவும் உயர்ந்த தரத்திற்கு உருமாறிந்து. இன்று பார்த்தாலோ, நம்ப முடியாத நிலைக்கு உயர்ந்து நிற்கிறது. யார் என்ன நிலையில், பயிற்சி பெற்று நிற்கின்றார்கள் என அனைவரையும் மலைய வைக்கின்றனர். அவ்வளவு அசுரத்தன்மை, பறிற்சி. இன்று, சிங்கப்பூரில் யார் முதன் முறையாக மிகச் சிறந்த யோகாப் போட்டியாளராகத் திகழப் போகிறார் என்பதை உரசிப் பார்க்கவிருக்கிறார். வரும் மே 28ம் ஞாயிறன்று, ஏராளமானோர் தங்கள் திறன்களை வடிவமைத்துக் காட்டவிருக்கின்றனர். காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை, தங்கள் திறன்களை சிராங்கூன் சமுக மன்றத்தில் நடத்திக் காட்டவிருக்கின்றனர். யார் மிகச் சிறந்த வீர்களாகவும் வீராங்கனைகளாகவும் திகழ்கின்றார்களோ, அவர்கள் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த வாழ்த்துகள்!



## Temple Yoga

Since 2002 the temple has nurtured children in the art of yoga. One unique feature of the yoga class is both parents and their children get to spend time at the temple doing yoga . There is an old adage which says ‘ a family that prays together stays together’ its also appropriate to say ‘ a family that does yoga together stays together’ . In this busy world its hardly possible for parents to spend quality time with their children and it’s encouraging to see children coming to the temple to learn yoga with their parents. The children have been primed over the years to bend their bodies and culture their mind through pranayama techniques. Yearly competitions are held at the temple to keep the children motivated and have a competitive spirit. This year the children will be participating in the 1st National Yoga Sports Championship to be held in Singapore on 28th May,at the Serangoon CC , the top performers will get an opportunity to represent Singapore in the 7th Asian Yoga Sports Championships to be held in Singapore from 28th to 30th July 2017

# தமிழ் நாட்டின் பிரசித்தி பெற்ற பதினெட்டு சித்தர்கள் வரலாறு - சட்டைமுனி



இலங்கையிலே சிங்கள தம்பதியற்கு பிறந்தவர் சட்டை முனி. அவரது பெற்றோர்கள் பிழைப்புக்காக தமிழகம் வந்தனர். சட்டைமுனி இளமையிலேயே தியானம், தவம் என அலைந்தார். மகனைச் சீர்திருத்தி, இல்லறத்தில் அடியெடுத்து வைக்கச் செய்ய மிகவும் போராடினர் பெற்றோரான சிங்கள தம்பதியர். மிகவும் கட்டாயப்படுத்தி மகனுக்கு திருமணமும் செய்து வைத்து விட்டனர். ஆனால், இறைவன் சித்தமோ வேறு மாதிரியாய் இருந்தது. சட்டைமுனிக்கு இல்லறத்தில் அறவே நாட்டமில்லை, துறவறம் பூண்டு விட்டை விட்டு வெளியேறி விட்டார். காடு, மலைகளில் திரிந்த அவர் போகர், திருமூலர், அகத்தியர் ஆகிய சித்தர்களைத் தரிசித்து அவர்களுடன் உரையாடி தானும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமெனவும், தனக்கு உபதேசிக்கும்படியும் வேண்டினார்.

ஒரு முறை சிவதரிசனம் பெற்ற உரோமசரைச் சந்தித்த சட்டை முனி, “முனிவரே! இந்த மக்கள் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களாக உள்ளனர். அடுத்தவர்களின் குறைகளைக் காணுகிறார்களே தவிர தங்கள் குறையைக் களைவது பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை. இந்த மக்களை நேர்வழிப்படுத்த விரும்புகிறேன். அதற்கு தாங்களே வழி செய்ய வேண்டும்” என்றார். “அன்பனே உன் உயர்ந்த நோக்கம் எனக்கும் புரிகிறது. சிவபெருமானே இதற்கு உனக்கு வழிகாட்ட இயலும். அவரது தரிசனம் வேண்டுமானால் நீ கயிலைகுச் செல். அவரை வழிபடு. கயிலைக்கு நீ இங்கிருந்து நடந்து செல்ல முயற்சிக்காதே. கடுமையான தவமிரு, அஷ்டமாசித்திகளை உன்னுள் வரவழைக்க கடும் பயிற்சி மேற்கொள். அவற்றை நீ அடைந்து விட்டால், உன் உடம்பைப் பஞ்சாக்கி நீ எந்த இடத்திற்கும் செல்ல முடியும்” என அருளுரை வழங்கினார்.

சட்டைமுனி சதுரகிரி எனப்படும் மலைக்கு வந்தார். அங்கே பல சித்தர்களின் தரிசனம் அவருக்கு கிடைத்தது. அவர்களுக்கு சேவை செய்து, அவர்களின் நம்பிக்கையை பெற்று அஷ்டமாசித்திகளை அடைந்தார். கடும் தவத்தின் பேரில் கயிலைக்கு பறந்து சென்றார். கயிலைமலையான் இவரது முயற்சியைக் கண்டு, நண்பன் போல இவருடன் பேசினார். சிவதரிசனம் பெற்ற சட்டைமுனி மீண்டும் தென்னகம் வந்தார். மக்களின் நோய் போக்க தமிழிலேயே மருத்துவக்குறிப்புகளை எழுதினார். அதோடு, மக்கள் சுபிட்சமாக வாழவும், இறந்தவர்களை எழுப்பும் வழிமுறைகளையும் பகிரங்கமாக எழுதினார்.

இறந்தவர்களை எழுப்பும் கலையை சித்தர்கள் சங்கேத மொழியிலேயே குறித்து வைப்பர் ஏனேனில், சித்தர்களின் குறிப்பை சிலர் தவறாகப் பயன்படுத்தியதே இதற்குக் காரணம். சட்டைமுனி பகிரங்கமாக எழுதியதால் ஆத்திரப்பட்ட சில சித்தர்கள் அந்தக் குறிப்புகளை கிழித்து எறிந்து விட்டனர். எனவே அவரது மருத்தூவக் குறிப்புகளும், இன்னும் பயனுள்ள தகவல்களும் மட்டுமே எஞ்சின.

ஒரு சமயம் சட்டைமுனி ரங்கநாதனைச் சேவிக்கச் செல்லும்முன் அர்த்தஜாம பூஜை முடிந்து, நடை அடைக்கப்பட்டு விட்டது. சட்டைமுனி மிகவும் வறுந்தி அதற்றினார். தன் பக்தனின் அபயக்குரலைக் கேட்ட பெருமான் நடையைச் திறக்க செய்தார். பெருமாள் தனது அணிகலன்களை சட்டைமுனிக்கு சட்டை போல் அணிவித்தார். இதனாலும் இவர் சட்டைமுனி என பெயர் பெற்றார் என்பதுண்டு. அப்போது ஊர் மக்கள் அவரை திருடனென சந்தேகித்து அரசனிடம் கொண்டு போய்விட, சட்டைமுனி திருவரங்கம் இறைவன் முன் கொண்டு செல்லபட, சட்டைமுனி இறைவனுடன் ஒன்றாகக் கலந்து மறைந்தார். இவர் திருவரங்கம் அல்லது சீர்காழியில் சமாதியாகி இருக்கலாம் என நம்புகின்றனர். சித்தர்களில் குறிப்பிட்ட நாளில் விரதம் இருப்பது இவருக்கு மட்டுமே. திருவோணம், பூனர்பூசம், பூசம், திருவாதிரை நட்சத்திர நாட்களிலும், புதன்கிழமைகளிலும், அமாவாசை மற்றும் வாஸ்து தினத்தன்றும் வழிப்பட்டால் நமது வேண்டுதல்கள் நிறைவேறும். சட்டைமுனி ஆவணி மாதம் மிருகசீருஷிம் நட்சத்திரத்தில் அவதரித்தார்.



## Lord Shiva

Lord Shiva is one of the most powerful and fascinating Hindu deities. He is considered as the aadi yogi and is revered as the God of Gods. Shiva is omnipotent, omniscient and omnipresent. He is also the destructor of life and also the reason for re-birth as well. Therefore, he is considered as the one who possesses both the generative and destructive powers of nature. Shiva has control over both the macro and micro levels of the cosmic energy he is worshipped as a mark of the male and female union. you will find a separate shrine for Shiva recognising him as unique , powerful and a fascinating deity of the Hindu trinity. Lord Shiva has never been portrayed with silk drapes or bright jewels. He does not wear a crown on his head but still remains the most powerful in the Hindu pantheon. He drapes the skin of tiger around his waist. He is the God with three eyes, the third eye is believed to cause tremendous destruction. He holds river Ganga in his matted hair locks and also wears the crescent of the Moon as an ornament. Vasuki - the king of snakes embraces itself around his neck while he is fully covered in the sacred ash or vibhuti. He holds a trishool or a trident with a damaru or a drum tied to it. It is said that the damaru produces the sound of AUM which can be perceived only by someone who is in deep meditation.



Hanuman Jayanthi
ஹனுமன் ஜெயந்தி
28.12.2016

## Sashti Aaptha Poorthi
## சஷ்டி அப்த பூர்த்தி



## Thaipusam was celebrated at our temple on 9.2.2017



## Thai Pongal was celebrated in both our Temple and at the Serangoon CC



## Weekly Sunday Morning Sri Muneeswaran Padayal Poojai
## ஞாயிறு தோறும் ஸ்ரீ முனீஸ்வரன் படையல் பூஜை











# DMT ACADEMY

| Classes | | Fee | Day | Time |
|---|---|---|---|---|
| Please approach temple counter staff for information on classes. | | | | |
| Hatha Yoga/அட்டாங்க யோகா (ladies only) | | $60 Individual | Monday | 7.30pm-8.30pm |
| | | $120 family | Monday | 7.30pm-8.30pm |
| Violin & Keyboard/வயலின் கீபோர்ட் | | | Wednesday | 6pm - 9pm |
| Free Homeopathy Counseling & Treatment / ஹோமியோபதி (by appoinment) | | | Wednesday | 6pm - 8pm |
| Kundalini Yoga/குண்டலினி யோகா | | | Thursday | 7pm - 9pm |
| Kindergarten Tamil Tuition/பாலர் வகுப்பு | K1 & K2 | $5 | Friday | 7.30pm-8.30pm |
| Reading Class Tamil/வாசிப்பு வகுப்பு (தமிழ்) | K1 & K2 | FOC | Friday | 8pm - 9pm |
| Bharathanaatiyam/பரதநாட்டியம் | | | Friday | 7pm - 9pm |
| Bhajans/பஜனை | | | Friday | 8.30pm |
| Tamil Tuition/ தமிழ்த் துணைப்பாட வகுப்பு | Pri 1, Pri 2, | $5 | Saturday | 10am - 11.30am |
| | Pri 3, Pri 4, Pri 5 | | Saturday | 11.30am - 1pm |
| | Pri 6 | | Fridays | 8pm - 9pm |
| Hatha Yoga / அட்டாங்க யோகா | | $35 children | Saturday | 1.30pm - 2.45pm |
| | | $60 Individual | Saturday | 1.30pm - 2.45pm |
| | | $120 family | Saturday | 1.30pm - 2.45pm |
| Gentle Yoga / முதியோருக்கான யோகா | | $30 seniors | Saturday | 12pm - 1pm |
| Saiva Siddhantha Level 1 Classes/சைவ சித்தாந்த வகுப்பு முதல் நிலை | | FOC | Saturday | 3.30pm - 5pm |
| Saiva Siddhanta Level 2 Classes/சைவ சித்தாந்த வகுப்பு 2ம் நிலை | | | Saturday | 5.30pm - 7pm |
| Saiva Siddhanta Level 3 Classes/சைவ சித்தாந்த வகுப்பு 3ம் நிலை | | | Saturday | 7pm - 9pm |
| Sangeetham/சங்கீதம் | | $45 | Saturday | 2pm - 7.30pm |
| Bakthi Class/பக்தி இந்து சமய வகுப்பு | | $25 | Sunday | 9am - 11am |
| Thevaaram/தேவாரம் | | $10 | Sunday | 1pm - 4pm |
| Hatha Yoga/அட்டாங்க யோகா | | $60 adults | Sunday | 8am - 9.30am |
| | | $120 family | Sunday | 8am - 9.30am |
| Sangeetham/சங்கீதம் | | $45 | Sunday | 4pm - 5pm |
| Miruthangam,Tabla/மிருதங்கம், தபேலா | | $45 | Sunday | 9am - 1pm |







## Important Festivals Darma Muneeswaran Temple

| | | |
|---|---|---|
| 14.04.17 | Friday | Tamil New Year (Heyvillambi) |
| 27.04.17 | Thursday | Siru Thondar Guru Puja |
| 10.05.17 | Wednesday | Chitra Pournami Muneeswaran Special Puja |
| 10.05.17 | Wednesday | Vesak Day (Nagar Special Pooja) |
| 02.06.17 | Friday | 17th Year Temple Annual Festival Ganapathy Homam |
| 10.06.17 | Saturday | Temple Annual Festival Chariot (Evening) |
| 30.06.17 | Friday | Aani Thirumanjanam Sri Nadarajar Abishegam |
| 15.07.17 | Saturday | Aadi Poora Brahmotsava Muneeswaran Puja |
| 16.07.17 | Sunday | Aadi Poora Brahmotsava Ganapathi Homam |
| 17.07.17 | Monday | Aadi Poora Brahmotsavam 1st Day Flag Hosting |
| 18.07.17 | Tuesday | Aadi 1st Tuesday Ubayam |
| 21.07.17 | Friday | Aadi 1st Friday Ubayam |
| 23.07.17 | Sunday | Aadi Amavasai |
| 26.07.16 | Wednesday | Aadi Poora Brahmotsavam 10th Day Theertham |
| 27.07.17 | Thursday | Aadi Poora Brahmotsavam vidaiyatri Vizha / Raghu Kedhu Peyarchi |
| 03.08.17 | Thursday | Aadi 18th Perukku Ubayam |
| 04.08.17 | Friday | Sri Varalakshmi Viratham |
| 11.08.17 | Friday | Maha Sankadahara Chathurthi Arugampul Archanai |
| 14.08.17 | Monday | Gokulastami (for Sri Ramar) |
| 02.09.17 | Saturday | Guru Peyarchi - 2016 Navagraha Homam |
| 20.09.17 | Wednesday | Navarathiri Festival Amman Padi Iranguthal |
| 21.09.17 | Thursday | Navarathiri 1st Day Ubayam |
| 23.09.17 | Saturday | Purattasi 1st Saturday Ubayam |
| 29.09.17 | Friday | Navarathiri 9th Day Ubayam (Saraswathi Puja) |
| 30.09.17 | Saturday | Navarathiri 10th Day Ubayam Vijayathasami (Ambu Poduthal) |
| 18.10.17 | Wednesday | Deepavali |




## Editorial Team

- A Mathivanan
- Poobalan Naidu
- N.S. Narayanan
- M Jaya Devi
- Meenatchi Sabapathy
- Soma Prasad

Designed & Printed by Graphicc Zone Tel: 62565747